**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**,

**DINDIGUL**.

**S**.**C**. 2 /2020

**Prosecution Witness** :1

| **Name** | : | திரு. ஜெயசந்திரன் | **Caste** | : | |
|---|---|---|---|---|---|
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | 17.08.2023 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**A**4 **Died** (**CA** ). **A**1 , **A**3, **A**6, **A**7 **present**. **A**2, **A**5 **absent**. 317 **Crpc petition filed and allowed**.

பட்டியல் சாட்சி 1 திரு. ஜெயசந்திரன் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் திண்டுக்கல் திருமயகவுண்டன்பட்டியில் குடியிருந்து , விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் மற்ற எதிரிகளையும் தெரியும். கடந்த 11.11.2013 ம்தேதி மதியம் 2.00 மணியளவில் செம்பட்டியில் உள்ள வேலுநாயக்கர் உணவகத்தில் எனது சகோதரர் பால்பாண்டியும், எங்கள் ஊரைச் சேர்ந்த நாகராஜ் என்பவரும்

செம்பட்டியில் உள்ள பெட்ரோல் பேங்கில் டீசல் போட்டுவிட்டு உணவகத்தில் சாப்பிட்டு கொண்டிருந்த போது கே. . தேவன்பட்டியினை சேர்ந்த சுப்பன் மகன் முருகன் என்பவருக்கு நாகராஜ் மேற்படி தேதிக்கு இரண்டு வருடத்திற்கு முன்பாக ரூ. 10,000/- கொடுத்துள்ளார். அதனை முருகனிடம் கேட்டதற்கு முருகன் நாகராஜ்யினை பார்த்து கண்ட இடத்தில் என்டா பணம் கேட்கீறாய் தரமுடியாது இனிமேல் கேட்டு வரக்கூடாது என்று சொல்லி முருகன் நாகராஜினை கையால் அடித்துள்ளார். அதை எனது சகோதரர் பால்பாண்டி விலக்கிவிட்டு , எனது சகோதரர், நாகராஜ் இருவரும் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்க சென்றிருந்த போது போலீசார் அன்றைய தினம் மாலை விசாரணைக்கு வருமாறு கூறி அனுப்பி வைத்தார்கள். அன்றைய தினம் மாலை நானும், நாகராஜ், விஸ்ணு, பால்பாண்டி, சுப்பிரமணி, செல்வராஜ் ஆகியோர்கள் காவல்நியைலம் சென்றறோம். அன்றைய தினம் இரவு 9.00 மணிக்கு விசாரணையினை முடித்து போலீசார் எங்களை அனுப்பி வைத்தார்கள். . பின்பு இரவு 9.30 மணியளவில் நாங்கள் கே. தேவன்பட்டி காலனி அருகே இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது ஊரில் ஒதுக்குபுறத்தில் சிறுநீர் கழிக்க சென்றோம். பின்னர் சுப்பன் மகன் முருகன், முருகன் மகன் வெங்கடேசன், பாப்புவாடன் மகன் பெருமாள், பெருமாள் மகன் சுப்பன், சுப்பன் மகன் பழனிச்சாமி, பழனிச்சாமி மகன் நவநீதன் ஆகியோர்கள் சாலையில் நின்றுக்கொண்டிருந்தார்கள். அவர்களை தாண்டிதான் நாங்கள் சிறுநீர் கழிக்க சென்றோம். சுமார் 5 நிமிடங்கள் கழித்து அலறல் சத்தம் கேட்டது. அது எனது அண்ணன் பால்பாண்டியன் சத்தம் என்பதால் நாங்கள் திரும்பி வந்து பார்த்தபோது மேற்படி எதிரிகள் எனது அண்ணனை அடித்து ரத்த வெள்ளத்தில் கிடந்தார். எங்களை பார்த்ததும் எதிரிகள் எனது அண்ணனை பார்த்து உன் சாவு எங்கள் கையில் தான்டா என்று

சொல்லிவிட்டு சென்றார்கள். எனது அண்ணனுக்கு பின்பக்க தலையில் பலத்த ரத்தகாயமும், உடல் முழுவதும் ஊமைக்காயமும் இருந்தது. எனது அண்ணனை ஒரு போக்குவண்டியில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது எனது அண்ணனிடம் விசாரித்த போது எனது அண்ணன் என்னிடம் நவநீதம் கம்பியால் பின்பக்க தலையில் அடித்தாகவும், வெங்கடேசன் கடற்பாறையால் உடல் முழுவதும் அடித்ததாகவும் , பெருமாள் பூண் போட்ட மண்வெட்டியால் உடம்பில் அடித்தாகவும், மற்ற எதிரிகள் அனைவரும் தடி குச்சியால் உடம்பு அடித்ததாகவும், அடிக்கும்போது எதிரிகள் அனைவரும் எனது அண்ணனை இதோடு சொத்து தொலைந்து போடா என்று சொல்லி அடித்து குரவலையினை பிடித்து நெறித்ததாகவும் எனது அண்ணன் கூறினார். பின்னர் எனது அண்ணனை திண்டுக்கல் அரசு மருத்துவமனையிலிருந்து மேல் சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிஷின் தனியார் மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் 12.11.2013 ம்தேதி நான் செம்பட்டி காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டடப்படும் புகார் மனு நான் கொடுத்து தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் மனு அதசாஆ. 1 ஆகும். எனது அண்ணன் மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனையில் சுமார் 25 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை 242 (3) **Crpc** கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது..

J MOHANA Digitally signed by J MOHANA Date: 2023.08.18 11:44:41 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**,

**DINDIGUL**.

**S**.**C**. 2 /2020

**Prosecution Witness** :2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பால்பாண்டி | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | 17.08.2023 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**A**4 **Died** (**CA** ). **A**1 , **A**3, **A**6, **A**7 **present**. **A**2, **A**5 **absent**. 317 **Crpc petition filed and allowed**.

பட்டியல் சாட்சி2 திரு. பால்பாண்டி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் திண்டுக்கல் திருமயகவுண்டன்பட்டியில் குடியிருந்து , விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1 எனது தம்பி ஆவார். ஆஜர் எதிரிகளையும் மற்ற எதிரிகளையும் தெரியும். கடந்த 11.11.2013 ம்தேதி மதியம் 2.00 மணியளவில் நானும் நாகராஜ் என்பவரும் சாப்பிடுவதற்காக செம்பட்டியில் உள்ள வேலுநாயக்கர் உணவகத்தில் சென்றிருந்தோம்.. அங்கு

முருகன் என்பவர் இருந்தார். நாகராஜ் இரண்டு வருடத்திற்கு முன்பாக முருகனுக்கு கொடுத்த ரூ. 10,000/- பணத்தினை திரும்ப கேட்டார். அதற்கு முருகன் பணம் கொடுத்தால் கண்ட இடத்தில் கேட்பியா என்று அசிங்கமாக பேசி, பணம் தரமுடியாது என்றும் , பணம் கேட்டு வரக்கூடாது என்று தகராறு செய்தார். பின்னார் முருகன் நாகராஜினை அடித்தபோது நான் விலக்கிவிட்டேன். பின்னர் நாங்கள் இருவரும் செம்பட்டி காவல்நிலையம் சென்று முருகன் மீது புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் முருகனும், நாகராஜ் மீது புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் எங்களை விசாரணைக்காக மாலையில் வரச்சொன்னார்கள். நாங்கள் இரவு 7.00 மணிக்கு சென்று , 9.00 மணியளவில் விசாரணையினை முடித்து அங்கிருந்து கிளம்பினோம். என்னுடன் வந்திருந்த அசா1, நாகராஜ் மற்றும் மற்றவர்கள் எனக்கு முன்பாக சென்றுவிட்டார்கள். நான் எனது இருசக்கர வாகனத்தில் பெட்ரோல் போட்டு விட்டு பின்புறம் சென்று கொண்டிருந்தேன்.. கே. தேவன்பட்டி காலனி அருகே சுமார் 9.30 மணியளவில் சென்றபோது அங்கு தயாராக இருந்த சுப்பன் , பழனிச்சாமி, பெருமாள், வேல்முருகன், முருகன், வெங்கடேசன், நவநீதி கிருஷ்ணன் ஆகியோர்கள் என்னை தடுத்து வழி மறித்தார்கள். அசிங்கமாக என்னை கொத்தா, கொம்மா என்று திட்டினார்கள். இவ்வளவு பிரச்சனைக்கும் இவன் தான்டா காரணம் என்று முருகனும், பழனிச்சாமியும் கூறி என்னை பிடித்துக் கொண்டு இவனை அடித்துக் கொள்ளுங்கடா என்று கூறினார்கள். அதன்பின் இதோடு சொத்து தொலைடா என்று சொல்லி நவநீதி கிருஷ்ணன் கம்பியால் எனது பின்பக்க தலையில் அடித்தார். பெருமாள் பூண் போட்ட மண் வெட்டிகணையினால் எனது பின்பக்க தலையில் அடித்தார். வெங்கடேசன் கடற்பாறையினைக் கொண்டு பின்பக்க தலையில் இதோடு செத்து தொலைடா என்று சொல்லி அடித்தார். மற்ற எதிரிகள் அனைவரும் தடியால் எனது உடல் முழுவதும்

அடித்து காயம் ஏற்படுத்தினார்கள். மேற்படி மூன்று எதிரிகள் தலையில் அடித்ததால் பலத்த ரத்த காயமும், மற்ற எதிரிகள் உடம்பில் அடித்ததில் ஊமைக்காயமும் ஏற்பட்டது. பின்னர் முருகன் , வெங்கடேசன், நவநீதி கிருஷ்ணன், பெருமாள் ஆகியோகள் எனது குரவலையினை பிடித்து நெறித்தார்கள். நான் அவர்களின் கையினை தள்ளிவிட்டு, காப்பாற்றுங்கள் என்று கத்தினேன். அப்போது அருகில் இருந்தவர்களும் எனக்கு முன்பாக சென்ற அசா1, நாகராஜ், விஸ்ணு, செல்வராஜ் , ஆகியோர்கள் ஓடி வந்தார்கள். அவர்களை பார்த்து எதிரிகள் என்னிடம் இப்போது தப்பித்து விட்டாய் உன் சாவு என் கையில்தான் என்று மிரட்டி விட்டு ஓடி வி ட்டார்கள். பின்னர் எனது தம்பியும் மற்றவர்களும் என்னை ஒரு போக்குவண்டியில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். . அதன்பின்பு அங்கு பார்க்கமுடியததால் மேல்சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிஷின் தனியார் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேற்படி மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது செம்பட்டி காவல்நிலைய காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள். நான் மேற்படி மருத்துவமனையில் சுமார் 27 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை 242 (3) **Crpc** கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது..

J MOHANA
Digitally signed by J MOHANA
Date: 2023.08.18 11:45:44 +0530

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**,

**DINDIGUL**.

**S**.**C**. 2 /2020

**Prosecution Witness** :3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. நாகராஜ் | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |
| | | | **Dated** | : | 17.08.2023 |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**A**4 **Died** (**CA** ). **A**1 , **A**3, **A**6, **A**7 **present**. **A**2, **A**5 **absent**. 317 **Crpc petition filed and allowed**.

பட்டியல் சாட்சி3 திரு. நாகராஜ் ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 3 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் திண்டுக்கல் திருமயகவுண்டன்பட்டியில் குடியிருந்து , விவசாய வேலை செய்து வருகிறேன். அசா1, னை தெரியும் . ஆஜர் எதிரிகளையும் மற்ற எதிரிகளையும் தெரியும். கடந்த 11.11.2013 ம்தேதி மதியம் 2.00 மணியளவில் நானும், பால்பாண்டியும் செம்பட்டியில் உள்ள பெட்ரோல் பங்கில் டீசல் போட்டு விட்டு அருகில் இருந்த வேலுநாயக்கர்

உணவகத்தில் சாப்பிட சென்றோம்.. அப்போது அங்கு எதிரி முருகன் இருந்தார். அவரிடம் இரண்டு வருடங்களுக்கு முன்பாக ரூ. 10,000/- கடனாக கொடுத்திருந்ததை திரும்ப கேட்டேன். அதற்கு முருகன் பணம் கொடுத்தால் கண்ட இடத்தில் கேட்பியா, பணம் தர முடியாது என்றும் தாயோழி என்று அசிங்கமாக திட்டினார். பின்னர் என்னை அடிக்க வந்தபோது பால்பாண்டி விலக்கிவிட்டார். பின்னர் நானும் பால்பாண்டியும் செம்பட்டி காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தோம்.. முருகனும் காவல்நிலையம் வந்திருந்தார். போலீசார் எங்களை மாலையில் விசாரணைக்கு வருமாறு கூறி அனுப்பி வைத்தார்கள். அன்று மாலை நானும், பால்பாண்டி, ஜெயசந்திரன், விஸ்ணு, செல்வராஜ் ஆகியோர்கள் காவல்நிலையம் சென்றோம். இரவு சுமார் 9.00 மணியளவில் விசாரணை முடித்து விட்டு நானும் எங்கள் ஊரைச் சேர்ந்தவரும் இருசக்கர வாகனத்தில் சென்றோம். பால்பாண்டி பெட்ரோல் போட்டுவிட்டு பின்னால் வருவதாக சொன்னார். இரவு சுமார் 9.30 மணியளவில் கே. தேவன்பட்டி காலனி அருகே சென்றபோது சுப்பன், சுப்பன் மகன் முருகன், பழனிச்சாமி, வெங்கடேஷ், நவநீதிகிருஷ்ணன், பெருமாள், வேல்முருகன் , ஆகியோர்கள் கூட்டமாக வழியில் நின்றுக்கொண்டிருந்தார்கள். நாங்கள் அவர்களை கடந்து சென்று சிறுநீர் கழித்து கொண்டிருந்தோம். அப்போது அலறல் சத்தம் கேட்டு திரும்பி வந்து பார்த்த போது நவநீதிகிருஷ்ணன் கம்பியாலும், வெங்கடேசன் கடற்பாறையினாலும், பெருமாள் பூண் போட்ட மண் வெட்டி கணையினாலும், மற்ற எதிரிகள் குச்சியினை வைத்திருந்தார்கள். எங்களை பார்த்ததும் என்னைக்கு இருந்ததாலும் உன் சாவு எங்கள் கையில் தான் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள். நாங்கள் சம்பவ இடம் சென்று பார்த்தபோது பால்பாண்டி தலையில் பலத்த ரத்தக் காயத்துடன் அடிப்பட்டு கீழே கிடந்தார். அவரை அந்த வழியாக வந்த போக்குவண்டியில் ஏற்றி

திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். மருத்துவமனைக்கு செல்லும் வழியில் என்ன நடந்தது என்று பால்பாண்டியிடம் கேட்டேன்.. அதற்கு முருகனும், பழனிச்சாமியும் கையினை பிடித்துக்கொள்ள நவநீத கிருஷ்ணன் கம்பியாலும், வெங்கடேசன் கடற்பாறையினாலும் , பெருமாள் பூண்போட்ட மண் வெட்ட கனையினாலும் தலையில் அடித்தாகவும் மற்ற எதிரிகள் அனைவரும் குச்சியால் உடம்பு முழுவதும் அடித்து காயம் ஏற்படுத்தியாக கூறினார். பின்னர் அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிஷின் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். . இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை 242 (3) **Crpc** கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது..

J MOHANA
Digitally signed by J MOHANA
Date: 2023.08.18 11:46:15 +0530